


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 142 | 4 Pages | 21.12.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 142 | 4 பக்கங்கள் | 21.12.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்**

**விளக்கம்:**
**மற்றவர்களோடு ஒத்து நடக்காமல், தன் வலிமையின் அளவையும் அறியாமல், தன்னை வியந்து மதித்துக் கொண்டிருப்பவன் விரைவில் கெடுவான்.**

# முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நெல்லை வருகை; ரூ.62 கோடி மதிப்பிலான பொருநை அருங்காட்சியகம் திறப்பு

நெல்லை, டிச.21

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நெல்லைமாவட்டத்தில்2நாட்கள்சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். அதன்படி அவர் இன்று (சனிக்கிழமை) காலை 11 மணி அளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு தூத்துக்குடிக்கு வருகிறார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் நெல்லைக்கு வருகிறார்.

அவருக்கு நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் கிரகாம்பெல் தலைமையில் சாரதா கல்லூரி அருகிலும், பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் பாலம் அருகே மத்திய மாவட்டம் சார்பில் மாவட்ட செயலாளர் அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தலைமையிலும் உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

தொடர்ந்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், அங்கிருந்து நெல்லை வண்ணார்பேட்டையில் உள்ள அரசு விருந்தினர் மாளிகை செல்கிறார். அங்கு மதிய உணவுக்கு பின்னர் நிர்வாகிகளை சந்திக்கிறார். தொடர்ந்து மாலை 4 மணியளவில் வண்ணார்பேட்டை தெற்கு புறவழிச்சாலை வழியாக டக்கரம்மாள்புரம் சென்று அங்கு நடைபெறும் கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்கிறார்.

தொடர்ந்து ரெட்டியார்பட்டி மலை 4 வழிச்சாலை அருகே அமைக்கப்பட்டுள்ள, அகழாய்வு பொருட்களை காட்சிப்படுத்தவும், தமிழர்களின் நாகரிகத்தை பறைசாற்றும் வகையிலும் ரூ.62 கோடியில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைக்கிறார்.



பின்னர் மின்னொளியில் ஜொலிக்கும் அருங்காட்சியகத்தை ஒவ்வொரு கட்டிடமாக சென்று பார்வையிடுகிறார். இதற்காக பிரத்யேக மின்சார வாகனம் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து மீண்டும் அரசு சுற்றுலா மாளிகைக்கு சென்று ஓய்வெடுக்கிறார்.

இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணி அளவில் வண்ணார்பேட்டையில் இருந்து புறப்படும்முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின்,நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விழா மேடைக்கு செல்கிறார். அங்கு அரசு சார்பில் நடைபெறும் விழாவில் மொத்தம் ரூ.639 கோடியில், காயிதே மில்லத் நினைவு நூலகம் உள்ளிட்ட புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், அரசு ஆஸ்பத்திரி கூடுதல் கட்டிடம் உள்பட முடிவுற்ற திட்டங்களை தொடங்கியும் வைக்கிறார்.

விழாவில் 45 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். 50 புதிய பஸ் போக்குவரத்து சேவையையும் தொடங்கி வைக்கிறார். பின்னர் அங்கிருந்து தூத்துக்குடி விமான நிலையத்துக்கு சென்று, விமானம் மூலம் சென்னை செல்கிறார்.

அரசு விழாவுக்காக சுமார் 30 ஆயிரம் பேர் அமரும் வகையிலான பிரமாண்ட பந்தல் அமைக்கப்பட்டு உள்ளது. அங்கு பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு உள்ளன.

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகையை முன்னிட்டு, நெல்லை மாநகரம் விழாக்கோலம் பூண்டது. வண்ணார்பேட்டை முதல் டக்கரம்மாள்புரம் வரையிலும் சுமார் 7 கிலோ மீட்டர் தூரத்துக்கு சாலையின் இருபுறமும் கம்பங்கள் நடப்பட்டு தி.மு.க. கட்சிக்கொடிகள் பறக்கின்றன. வழிநெடுகிலும் நிர்வாகிகள் வரவேற்பு பேனர்கள் வைத்துள்ளனர்.

பாளையங்கோட்டை அரியகுளம், கே.டி.சி. நகர், வண்ணார்பேட்டை, ரெட்டியார்பட்டி மலைச்சாலை பகுதிகளில் தி.மு.க. கொடிகள், வரவேற்பு பேனர்கள் வைக்கப்பட்டு உள்ளன. இதுதவிர முதல்அமைச்சர் வந்து செல்லும் சாலைகள் சீரமைக்கப்பட்டு பளிச்சென்று காட்சி அளிக்கின்றன.

# வங்காளதேச வன்முறைக்கு பத்திரிகையாளர் பலி; இந்து வாலிபரை கொன்று, கம்பத்தில் தொங்க விட்டு, உடலை எரித்த கொடூரம்



டாக்கா, டிச.21

இந்தியாவின்அண்டை நாடான வங்காளதேசத்தில் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான ஆட்சிக்கு எதிராக கடந்த ஆண்டு ஜூலையில் மாணவர் போராட்டம் வெடித்தது. ஹசீனாவுக்கு எதிரான இந்த போராட்டம் தொடர்ச்சியாக ஆளும் அரசு கவிழ்ந்தது. ஷேக் ஹசீனா பதவி விலகியதுடன், கடந்த ஆண்டு ஆகஸ்டு 5ந்தேதி சகோதரியுடன் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்து உள்ளார்.

இதன் பின்னர், பேராசிரியர் முகமது யூனுஸ் தலைமையில் வங்காளதேசத்தில் இடைக்கால அரசு அமைந்தது. நாட்டின் தலைமை ஆலோசகராக யூனுஸ் செயல்பட்டு வருகிறார். கடந்த ஆண்டு ஜூலை மாதம் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களின் முக்கிய தலைவராக இருந்தவர்களில் ஷெரீப் உஸ்மான் ஹாதி (வயது 32) என்பவரும் ஒருவர்.

இவர் இங்குலாப் மாஞ்சா என்ற அமைப்பை நிறுவி அரசியலில் ஈடுபட்டார். தலைநகர் டாக்காவின் பிஜோய்நகர் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த அவரை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பினர். இந்நிலையில், சிங்கப்பூரில் தீவிர சிகிச்சை பெற்று வந்த அவர், கடந்த வியாழக்கிழமை இரவு உயிரிழந்து விட்டார். அவருடைய மரணம் தொடர்ச்சியாக வங்காளதேசத்தில் வன்முறை வெடித்தது.

இதில், முன்னாள் கல்வி மந்திரி மொகிபுல் ஹசன் சவுத்ரியின் வீடு கொளுத்தப்பட்டது. வங்காளதேசத்தின் நிறுவன தந்தையான ஷேக் முஜிபுர் ரகுமானின் வீடும் சூறையாடப்பட்டது. இந்திய துணைத்தூதரின் வீடு மீதும் கல்வீச்சு சம்பவம் நடந்தது.

இந்த சூழலில், வங்காளதேசத்தில் மைமன்சிங் நகரை சேர்ந்த திபு சந்திர தாஸ் (வயது 25) என்ற வாலிபர் துணி தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து வந்திருக்கிறார். அவர், மத நிந்தனை செய்து விட்டார் என கூறி அவருடைய ஆடைகளை களைந்து, நிர்வாணப்படுத்தி, ஒரு கும்பல் தொங்க விட்டுள்ளது. பின்னர் கம்பத்தில் கட்டி வைத்து, அடித்து கொலை செய்தது. இதன்பின்னர் அவருடைய உடலை தீ வைத்து எரித்த கொடூர சம்பவம் நடந்துள்ளது. இந்த சம்பவத்திற்கு ஆளும் இடைக்கால அரசு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது.

இதேபோன்று இம்தாதுல் ஹக் மிலோன் என்ற பத்திரிகையாளர், குல்னா பகுதியில் மர்ம நபர்களால் சுட்டு கொல்லப்பட்டார். வன்முறை கும்பல், தி டெய்லி ஸ்டார் மற்றும் புரோதம் ஆலோ ஆகிய இரு பத்திரிகை அலுவலகத்திற்குள் புகுந்து சூறையாடியது. பத்திரிகை வளாகத்தில் தீ வைத்து கொளுத்தி விட்டு தப்பி சென்றது.

# எஸ்.ஐ.ஆர்க்கு பிறகு குஜராத்தில் 73.73 லட்சம் வாக்காளர்கள் நீக்கம்

ஆமதாபாத், டிச.21

தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களைப்போல குஜராத்திலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நடந்தது. இந்த பணிகளுக்குப்பின் நேற்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

இதன்படி வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாட்டிற்கு அடுத்தபடியாக குஜராத்தில், சுமார் 74 லட்சம் அதாவது 73.73 லட்சம் (14.50%) பேர் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். குஜராத்தில் எஸ்.ஐ.ஆருக்கு முன்பு, 5,08,43,436 வாக்காளர்கள் இருந்தனர், தற்போது 4,43,70,109 பேர் வரைவு பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

நீக்கப்பட்ட வாக்காளர்களில் இறந்தவர்கள் 18.07 லட்சம், இருப்பிடம் தெரியாதவர்கள் 9.69 லட்சம், நிரந்தரமாக புலம்பெயர்ந்தவர்கள் 40.25 லட்சம், 2 இடங்களில் பதிவு செய்திருந்தவர்கள் 3.81 லட்சம் பேர் அடங்குவர். இதன் மூலம் மாநில வாக்காளர் பட்டியல் தூய்மைப்படுத்தப்பட்டு உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி ஹரீத் சுக்லா கூறினார்.

# டெல்லி, அரியானா உள்பட 13 இடங்களில் அமலாக்கத்துறை திடீர் சோதனை; பணம், தங்கக்கட்டிகள் பறிமுதல்

புதுடெல்லி, டிச.21

அமெரிக்காவில் ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்ற பின்னர் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். சட்டவிரோத குடியேறிகளை சொந்த நாட்டுக்கு நாடு கடத்தினார். இதன்படி, கடந்த பிப்ரவரி மாதம் 330 இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

அவர்கள் டங்கி பாதை எனும் சட்டவிரோத வழிமுறைகள் மூலம் அமெரிக்காவில் குடியேறி உள்ளனர். நாடு திரும்பியவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இந்திய ஏஜெண்டுகள் அவர்களை முறைகேடாக அனுப்பி கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்தது தெரியவந்தது.

இது தொடர்பாக அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து டங்கி பாதை மோசடியை விசாரிக்க தொடங்கியது. இந்த சட்டவிரோத செயலுக்கு பின்னால் இந்திய முகவர்கள், வெளிநாட்டு முகவர்கள், ஹவாலா பண மோசடி கும்பல் என சங்கிலி தொடர் கும்பல்களின் தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வழக்கில் நேற்று பஞ்சாப், டெல்லி, அரியானா உள்ளிட்ட இடங்களில் அமலாக்கத்துறை திடீர் சோதனைகளை மேற்கொண்டது. இந்த மோசடியின் பின்னணியில் 2வது மற்றும் 3வது மட்டத்தில் உள்ளதாக சந்தேகிக்கப்படும்நிறுவனங்கள்,தனிநபர்களைபட்டியலிட்டுஅவர்கள்சம்பந்தமான அலுவலகங்கள், வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது.

பஞ்சாபின் ஜலந்தரில் உள்ள ஒரு பயண நிறுவனத்தின் வளாகம் மற்றும் டெல்லி மற்றும் பானிபட்டில் (அரியானா) உள்ள சில தனிநபர்களின் இடங்கள் என 13 இடங்களில் சோதனையிடப்பட்டதாக தகவல் வெளியானது. இந்த சோதனையில டெல்லி முகவரிடம் இருந்து ஏராளமான பணம், தங்க கட்டிகள் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு உள்ளதாக தெரிய வந்திருக்கிறது. அது பற்றிய முழுமையான விவரங்கள் சோதனைகள் முடிந்த பின்னர் வெளியிடப்படும் என்று அமலாக்கத்துறை வட்டாரம் தெரிவித்துள்ளது.

# தேசிய மரபணு மருத்துவ அறிவியல் மாநாடு




திருப்பத்தூர் பிரபல மரபியல் நோய் வல்லுநர் மற்றும் ஆலோசகர், மரு. ஆ. பரந்தாமன் அவர்களின் புகழ் மரபியல் ஆலோசனை மையம், சுவாசம் ஹெல்த்கேர் சென்டர் (சென்னை) மற்றும் இன்ஸ்டிடியூட்ஆப்ஹியூமன்ஜெனெடிக்ஸ் (அகமதாபாத்) இணைந்து நடத்தும் இரண்டாவது தேசிய மரபணு மருத்துவ அறிவியல் கருத்தரங்கு.

மரபணுமருத்துவத் துறையில் நடைபெறும் புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி முன்னேற்றங்கள் மற்றும் சமூக பயன்பாடுகள் குறித்து இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

இந்த கருத்தரங்கில்இந்தியா மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த முன்னணி மரபணுவிஞ்ஞானிகள், மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள், இளங்கலை,முதுகலை மருத்துவ மாணவர்கள்மற்றும் மரபணுகுறைபாடுடைய குழந்தைகளின் பெற்றோர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

மாநாட்டின் முக்கிய அம்சங்களாக,

1. மரபணு தொழில்நுட்பம், மரபணு மாற்றங்கள், மரபியல்குறைபாடுகள், எதிர் கால சவால்கள் குறித்து விரிவுரைகள்வழங்கப்பட்டன.

2. இந்தியாவின் பாரம்பரிய மற்றும் மாற்றுமருத்துவமுறைகளானஹோமியோபதி, சித்தா, இயற்கை மருத்துவம், யோகா, மற்றும் ஆயுர்வேதமருத்துவர்கள், மருத்துவ விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர்.

மாநாட்டின் முக்கிய உரைகள்

1. ஆராய்ச்சி கட்டுரை விளக்கங்கள்
2. போஸ்டர்விளக்கக்காட்சிகள்
3. கலந்துரையாடல்கள்ஆகியவைஇடம்பெற்றன.

மாநாட்டின் முக்கிய நோக்கம்,

குழந்தையின்மை, மலட்டுத்தன்மை, தொடர்ச்சியான கருச்சிதைவு, மரபியல் குறைபாடு, மன வளர்ச்சிக் குறைபாடு, பிறவிக்குறைபாடுகள்,அறிவுத்திறன்குறைபாடுகள்,பரம்பரை நோய்கள் போன்ற பிரச்சனைகளைஅணுகுவது, வராமல் தடுத்து வரும்தலைமுறையினரைகாப்பது என்பதே மாநாட்டின் தலையாய நோக்கம்.

இந்த தேசியமரபணுமருத்துவ அறிவியல் மாநாடுமற்றும்கருத்தரங்கு புதிய மருத்துவ ஆராய்ச்சிகளைஊக்குவிப்பதோடு, மாணவர்கள் மற்றும் இளம் ஆராய்ச்சியாளர்களுக்குமருத்துவ அறிவியல் நிபுணர்களுடன் நேரடியாக கலந்துரையாடும்வாய்ப்பினைவழங்கியது. அறிவுத்திறன்மற்றும்மரபணுகுறைபாடுடைய குழந்தைகளின் உடல் நலம் மற்றும் மன நலம் மேலும் பாதிக்கப்படாமல் இருக்கவும் அவர்களின் முன்னேற்றத்திற்கு தேவையான ஆலோசனைகள், வழிமுறைகள் மருத்துவ நிபுணர்களால் வழங்கப்பட்டன.

மாநாட்டின் தொடக்க விழாவில் முக்கிய விருந்தினர், தலைவர்பேராசிரியர்ஜெயேஷ் ஷெய்த்மற்றும்இயக்குனர் மருத்துவர்.பிரென்னிஷெய்த்,

இன்ஸ்டிடியூட் ஆப் ஹியூமன் ஜெனெடிக்ஸ்(அகமதாபாத்),இயக்குனர் பேராசிரியர் சடகோபன் ஸ்ரீனிவாசன்(HOD Pediatrics, JIPMER, Pondicherry) மற்றும்மருத்துவர். சுதாரத்னா பிரபு, நிர்வாக இயக்குநர், சுவாசம் ஹெல்த்கேர் சென்டர் (சென்னை)கலந்து கொண்டுசிறப்புரையாற்றினார்

நிறைவு விழாவில் சிறந்த ஆராய்ச்சி கட்டுரைகள் மற்றும் போஸ்டர்விளக்காட்சிகளுக்குபரிசுகள்வழங்கப்பட்டன. மேலதிகதகவல்களுக்கு Dr. A. Parandhaman, Ph.D., FECA(Paris)., Clinical Cytogeneticist and Genetic Counsellor

Pugazh Centre for Genetic Counselling, Jothimangalam village, C.K. Ashramam Post, Tirupattur – 635 602. Mobile Number: 8838638950 / 9840127911

# தமிழக வெற்றிக் கழகம் தாராபுரம் தெற்கு நகர கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள் ஆலோசனை கூட்டம்



தமிழக வெற்றிக் கழகம் தாராபுரம் தெற்கு நகர கழக நிர்வாகிகள் மற்றும் வார்டு செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது இதில் நாம் நமது தெற்கு நகரத்தில் தெருமுனை பிரச்சாரம் செய்வது குறித்தும் உறுப்பினர் சேர்க்கையை அதிக்கப்படுத்திடவும் அடுத்த கட்ட நகர்வை எவ்வாறு எடுத்து செல்வது குறித்தும் விரிவாக விவாதிக்கபட்டது இந் நிகழ்வில் தாராபுரம் தெற்கு நகர செயலாளர் அபுத்தாஹீர் தலைமை தாங்கினார், ஜவகர் அண்ணா, அம்மன் பாலு அண்ணா மற்றும் மாவட்ட வாக்குசாவடி அணி அமைப்பாளர் சுஜித், ஆகியோர் முன்னிலை வகித்தனர், நகர து. செயலாளர் ரமேஷ், பொருளாளர் குணசேகரன், சண்முகபிரியன்,கோகுல் தில்லை

வார்டு செயலாளர்கள் ரங்கராஜ், நவீத், துறைசாமி, ரஞ்சித், காளிரத்தினம்,மணிகண்டன்,சந்தோஷ், ஜாகிர், ராஜேஷ் குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்



# புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியில் பா.ம.க. நிர்வாகிகள் முழு வீச்சில் ஈடுபட வேண்டும்: அன்புமணி அறிவுறுத்தல்



சென்னை, டிச.21

பா.ம.க. தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ளை அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் கடந்த ஒன்றரை மாதங்களாக நடைபெற்று வந்த வாக்காளர்பட்டியல் சிறப்புத் தீவிரத்திருத்தப் பணிகள்நிறைவடைந்து வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில் புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் பணிகள் நேற்று முதல் தொடங்கியிருக்கும் நிலையில், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியில் பாட்டாளி மக்கள் கட்சியினர் முழுவீச்சில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் இருந்து 97 லட்சம் பேர் நீக்கப்பட்டிருக்கும் நிலையில், அவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாக்காளர்கள் தகுதியுடைய வாக்காளர்களாகவே இருக்கக் கூடும். இடமாற்றம் உள்ளிட்ட காரணங்களால் , உரிய ஆவணங்களைத் தாக்கல் செய்ய முடியாததால் அவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கக் கூடும். அத்தகைய வாக்காளர்களை அடையாளம் கண்டு அவர்களையும், இதுவரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களையும் படிவம் எண் 6ஐ நிரப்பிக் கொடுத்து சேர்க்க வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள விவரங்களை திருத்துவதற்கு படிவம் 8ஐயும், ஒரே தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்து கொள்வதற்காக படிவம் 8ஏவையும் நிரப்பிக் கொடுக்க வேண்டும். சென்னை உள்பட தமிழ்நாடு முழுவதும் நேற்று தொடங்கிய புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் பணிகள் அடுத்த மாதம் 18ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன. இன்றும்,

நாளையும் உள்பட பல சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த காலக் கட்டத்தில் தகுதியுடைய அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க பா.ம.க. நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மிகப் பெரிய அங்கீகாரமே வாக்குரிமை தான். அதை எவரும், எந்த காரணத்திற்காகவும் இழந்து விடக் கூடாது. எனவே, இன்று தொடங்கி ஜனவரி மாதம் 18ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் புதியவர்களைச் சேர்க்கும் தேனீக்களாக உழைக்க வேண்டும். இது தொடர்பாக பொது மக்களுக்குத் தேவைப்படும் மனைத்து உதவிகளையும் பாட்டாளி மக்கள் கட்சியினர் செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திமுக ஆட்சிக்கு வந்த பிறகு பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வருகின்றன சீமான்



சென்னை, டிச.21

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தர்மபுரி மாவட்டம் குடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி உடற்கல்வி ஆசிரியர் மணிவண்ணன் 9ம் வகுப்பு மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த செய்தி அதிர்ச்சியும் மிகுந்த, மனவேதனையும் அளிக்கிறது. தமிழ்நாட்டில் பள்ளி சிறுமிகள் மீதான பாலியல் தொல்லைகள் அதிகரித்து வருவது வன்மையான கண்டனத்துக்குரியது.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் பன்மடங்கு அதிகரித்து வருகின்றன. அதிலும் குறிப்பாகப் பள்ளி படிக்கும் சிறுமிகள் மீதான பாலியல் தாக்குதல்கள் குறித்து ஒவ்வொரு நாளும் வெளியாகும் செய்திகள் இதயத்தை நொறுக்குகிறது. கட்டுக்கடங்காத போதைப்பொருள் புழக்கம் காரணமாக ஒட்டுமொத்த சமூகமும் குற்றச் சமூகமாக மாறிநிற்பதே பாலியல் வன்கொடுமை உட்பட நாட்டில் நடைபெறும் அனைத்து கொடுங்கொடுங்குற்றங்களுக்கும் அடிப்படைக் காரணமாகும்.

அக்கொடுமைகளின் தொடர்ச்சியே தர்மபுரியில் நடைபெற்ற பள்ளி சிறுமி மீதான பாலியல் தொல்லையுமாகும். அதைவிடவும் பெருங்கொடுமை பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகள் துணையுடன் சிறுமியின் பாமர பெற்றோரை ஏமாற்றிக் கட்டப்பஞ்சாயத்துப்பேசி அக்கொடுஞ்செயலை மூடி மறைக்க முயன்றதாகும்.

இக்கொடுமை குறித்த தகவல் வெளிவந்தவுடன் கொதித்தெழுந்த ஊர் பொதுமக்கள் நடத்திய தொடர்ப்போராட்டத்தின் விளைவாக, தற்போது பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட போதிலும், கட்டப்பஞ்சாயத்துப் பேசி குற்றத்தை மறைக்க முயன்ற கயவர்களைத் தப்பிக்க விட்டிருப்பது பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அநீதியாகும். பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகளும் இக்குற்றத்திற்குத் துணை நின்றிருப்பது மன்னிக்க முடியாத கொடுமையாகும்.

ஆகவே, தமிழ்நாடு அரசு தர்மபுரி மாவட்டத்தில் 9ம் வகுப்பு பள்ளி சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்த குற்றவாளி மற்றும் அதனை மறைக்கத் துணைநின்ற கயவர்கள் அனைவருக்கும் எவ்வித அதிகாரதலையீட்டுக்கும், அரசியல் அழுத்தங்களுக்கும் இடமளிக்காமல் நேர்மையான, விரைவான நீதி விசாரணை நடத்தி மிகக்கடுமையான தண்டனைப் பெற்றுத்தர வேண்டுமெனவலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# எஸ்.ஐ.ஆர்: விடுபட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிர்ச்சி அளிக்கிறது மு.வீரபாண்டியன்



சென்னை, டிச.21

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியத் தேர்தல் ஆணையம் கடந்த அக்டோபர் 27 ஆம் தேதி அறிவித்த வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்த நடவடிக்கை நிறைவடைந்து, நேற்று (19.12.2025) வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

முந்தைய வாக்காளர் பட்டியலுடன்ஒப்பிடும்போது, 97 லட்சத்து 28 ஆயிரம் வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்காமல் நீக்கப்பட்டுள்ளனர். இதில் குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதவர்கள் என்கிற முறையில் 66 லட்சத்துக்கும் அதிகமானோர் நீக்கப்பட்டுள்ளனர். இது நீக்கப்பட்ட வாக்காளர்களில் 68 சதவீதமாக இருக்கிறது.

நீக்கம் செய்யப்பட்டவர்கள் குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதவர்கள் என்பதை எந்த அடிப்படையில் உறுதி செய்யப்பட்டது என்பதை தேர்தல் ஆணையம் விளக்க வேண்டும். நீக்கம் செய்யப்பட்ட வாக்காளர்கள் மீண்டும் பெயரை சேர்க்க வேண்டும் என்ற உரிமை கோரி முறையிடும் போது, அதனை ஏற்று, வாக்காளர் பட்டியலில் அவரது பெயரை சேர்க்க ஆணையம் உறுதியளிக்க வேண்டும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பெயர் இடம் பெற்றிருந்த வகையில் 3.98 லட்சம் பேர் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதில் குறிப்பிட்ட ஒரு தொகுதியில், குறிப்பிட்ட வாக்கு சாவடியில் மட்டும் அவரது பெயரை சேர்த்து, கூடுதலாக இடம் பெற்றுள்ள பகுதியில் நீக்கம் செய்யாமல், மொத்தமாக நீக்கம் செய்தது ஏன்? என்ற வினா எழுகிறது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் உயிர் நாடி, வாக்காளர்கள் என்பதை கருத்தில் கொண்டு, இறந்தவர்கள் தவிர, உயிருடன் வாழ்ந்து வரும், எவர் ஒருவர் பெயரும் மறுக்கப்படாமல் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதில் தேர்தல் ஆணையம் கூடுதல் அக்கறையும், முனைப்பும் காட்ட வேண்டும்.

மத்திய அரசின் உள்துறை மந்திரி அமித்ஷாவும், பாஜக, ஆர் எஸ் எஸ் தலைவர்களும் பேசி வரும் செய்தி, சிறப்புத் தீவிர திருத்த முறையில் பெரிய தவறு நடக்குமோ? என்ற ஆழ்ந்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. தலைமைத் தேர்தல் ஆணையர் வெளியிடும் தகவல்களும், தேர்தல் ஆணையம் மீதான சந்தேக நிழலை விலக்க முடியவில்லை.

ஜனநாயகத்தில் இறுதி எஜமானர்கள் வாக்காளர்களும், குடி மக்களும் என்கிற முறையில் எச்சரிக்கையாக இருந்து, சதிகளை முறியடித்து, ஜனநாயக உரிமைகளை பாதுகாபத்தில் தேர்தல் ஆணையம் வெளிப்படையாக நடந்து கொள்ள வேண்டும் என இந்தியக்கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பணி வழங்கப்படாததால் தூய்மைப் பணியாளர் தற்கொலை: திமுக அரசு தான் பொறுப்பேற்க வேண்டும் அன்புமணி

சென்னை டிச.21

பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை மாநகராட்சியின் ராயபுரம் மண்டலத்தில் உள்ள 50ம் வட்டத்தில் தூய்மைப் பணிகள் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டதால், கடந்த 5 மாதங்களாக பணியும், ஊதியமும் வழங்கப்படாமல்

வறுமையிலும், மன உளைச்சலிலும் வாடி வந்த தூய்மைப் பணியாளர் டி.ரவிக்குமார் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் ராயபுரம், திரு.வி.க. நகர் ஆகிய மண்டலங்களில் குப்பைகளை அகற்றும் பணி தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டதால் பணி வழங்கப்படாத ஆயிரத்திற்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் எத்தகைய வறுமையையும், மன உளைச்சலையும் அனுபவித்து வருகின்றனர் என்பதற்கு டி.ரவிக்குமாரின் தற்கொலை சிறிய எடுத்துக்காட்டு தான்.

தூய்மைப் பணி தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டதைக் கண்டித்து தூய்மைப் பணியாளர்கள் நடத்தி வரும் போராட்டம் 150ம் நாளை நெருங்கும் போதிலும், அவர்களின் கோரிக்கையை திமுக அரசு ஏற்க மறுப்பதற்கு காரணம் ஒப்பந்தத்தைப் பெற்ற நிறுவனங்களிடமிருந்து கிடைத்த வெகுமதிகள் தான். அந்த நிறுவனங்களிடமிருந்து ஆட்சியாளர்களுக்கு கோடிக்கணக்கில் கையூட்டு வழங்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

தங்களின் லாபத்திற்காகவும், பேராசைக்காகவும் தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்து அவர்களை தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு ஆட்சியாளர்கள்தள்ளியிருப்பதைமன்னிக்கமுடியாது.ரவிக்குமாரின் தற்கொலைக்கு திமுக அரசு தான் பொறுப்பேற்க வேண்டும். அவரது குடும்பத்திற்கு ரூ.50 லட்சம் இழப்பீடும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க திமுக அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நீலகிரி அரசு மருத்துவ கல்லூரியில் நுகர்வோர் காலாண்டு கூட்டம்



நீலகிரி அரசு மருத்துவ கல்லூரியில் நுகர்வோர் காலாண்டு கூட்டம் நடைபெற்றது.

மருத்துவக்கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி முதல்வர் ஸ்ரீ சரவணன் தலைமை தாங்கினார். இருப்பிட மருத்துவ அலுவலர் ரவிசங்கர் மருத்துவமனை கண்காணிப்பாளர் பாலசுப்ரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், கோத்தகிரி புளுமவுண்டன் நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலாளர் முகமதுசலீம், கூடுதல் செயலாளர் பீட்டர், உதகை தொகுதி நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் அமீர்கான், இம்ரான், குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க நிர்வாகி லட்சுமி நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். மருத்துவக் கல்லூரி முதல்வர் ஸ்ரீ சரவணன் பேசும் போது அரசு மருத்துவக் கல்லூரியில் தற்போது 22 துறைகள் மூலம், நோயாளிகளுக்கு ஏற்ப மருத்துவ சிகிச்சைகள் நோயின் தன்மை மற்றும் அவசர தேவைக்கானசிகிச்சைகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விலை உயர்ந்த மருந்துகள் வாங்க இயலாத நிலையில் வேறு மாவட்ட மருத்துவக் கல்லூரிக்கு பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சைகள் பெறுவது குறித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. வெளிநோயாளிகள் காலை 9.30 மணிமுதல் 1.30 மணிவரை பார்க்கப்படுகிறது. உள்நோயாளிகளுக்கு காலை மாலை மருத்துவர் கண்காணிப்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளபடுகிறது. சாதாரண நோய்களுக்கு அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை மக்கள் பயன்படுத்திக் கொண்டு, மேல்சிகிச்சைக்கு இங்கே வந்தால் மருத்துவ கல்லூரியின் கூடுதல் சிகிச்சைக்கு பயனளிக்கும்.தினசரி1000திற்கு மேற்பட்ட வெளிநோயாளிகள் 400கும் மேற்பட்ட உள்நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். தினசரி ஒரு கலர் என்கிற அடிப்படையில் பெட்ஷீட் தலையணைகள் மாற்றபடுகின்றன. ஒரு நோயாளி வெளியே செல்லும்போதும் பெட்ஷீட், தலையணைகள் மாற்றப்பட்டு புது நோயாளி அட்மிட் ஆகும்போது வேறு பெட்ஷீட் தலையணை வழங்கப்படும். தற்போது சுமார் ஆயிரம் மாணவர்கள் இளநிலை மருத்துவம் பயின்று வருகின்றனர். அரசு விதிமுறைகள் படி தேவைக்கேற்ப பிரிவுகள் செயல்பட்டு வருவதால் பெரும்பான்மையான சிகிச்சைகள் இங்கு வழங்கப்பட்டு வருகிறது. அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், சிடி ஸ்கேன் மற்றும் எம் ஆர்ஐ ஸ்கேன் ஆகியன அரசு நிர்ணயித்த கட்டண அடிப்படையில் முன்னுரிமை மற்றும் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காப்பீடு திட்டம் மூலம் கூடுதல் விலையுள்ள மருத்துவ அறுவை சிகிச்சை உபகரணங்கள் வாங்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்படுகிறது. சுகாதார பராமரிப்பில் தினசரி 3 முறை கழிவறைகள் சுத்தம் செய்யப்படுகின்றது. ஆனால் பொதுமக்கள் ஒத்துழைப்பு மிக குறைவாக உள்ளதால், உணவுக் கழிவுகளை ஆங்காங்கே கொட்டி வைப்பதும், மருத்துவமனையில் உள்ள கழிவறைகளில் மது பாட்டில்கள், நாப்கின் பேடுகள் போன்றவை போட்டு வைப்பதால், அடைப்புகள் ஏற்பட்டு சிரமத்தை ஏற்படுத்துகிறது. மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் அந்த குறைபாடும் நீங்கும். இடவசதி கிடைத்தால் தாய்சேய் மருத்துவ பிரிவு, குழந்தைகள் பிரிவும் புதிய மருத்துவ கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டு ஒரே வளாகத்தில் செயல்படுத்தப்படும். நோயாளிகள் மருத்துவ கல்லூரிக்கு வரும் முன்னர் காப்பீடு அட்டையும் எடுத்துவந்தால் கூடுதல் சிகிச்சைக்கு பயனளிக்கும் என்றார்.

# நாயுடுமங்கலம் ஏரிக்கரையில் பனை விதைகள் நடும் விழா: இளைஞர் திறன் மேம்பாட்டுச் சங்கம் முன்னெடுப்பு




திருவண்ணாமலை இளைஞர் திறன் மேம்பாட்டுச் சங்கம் (*Tiruvannamalai Youth Skill Development Society*) சார்பில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கிலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் "இன்றைய விதைப்பு, நாளைய பாதுகாப்பு" என்ற முழக்கத்துடன் பனை விதைகள் நடும் நிகழ்வு இன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வு விவரங்கள்:

நாயுடுமங்கலம் ஏரிக்கரைப் பகுதியில் இந்த மரம் நடுதல் மற்றும் விதைப்புப் பணி நடைபெற்றது. பனை மரம் தமிழர்களின் வாழ்வோடும், நிலத்தோடும் ஒன்றிணைந்த மரம் என்பதையும், அவை நூற்றாண்டுகள் கடந்து வாழக்கூடியவை என்பதையும் வலியுறுத்தி இந்த முயற்சி எடுக்கப்பட்டது.

பங்கேற்பாளர்கள்: இந்த நிகழ்வில் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் முன்னிலை வகித்து, பனை விதைகளை நட்டு வைத்தனர். குறிப்பாக:

★ திரு. வெங்கடேசன்
★ திரு. புருஷோத்தமன்
★ திரு. தனசேகரன்
★ திரு. ராஜா ஆகியோர் கலந்து கொண்டு, பனை மரத்தின் முக்கியத்துவம் குறித்தும், ஒருதலைமுறை நடும் பனை மரம் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் பயன் தரும் என்பது குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்தத் திட்டத்தின் மூலம் ஏரிக்கரையின் பலம் பாதுகாக்கப்படுவதோடு, இயற்கை சமநிலையும் பேணப்படும் எனச் சங்க நிர்வாகிகள்தெரிவித்தனர்.

# தென்காசி மாவட்டம் வெள்ளாளன்குளம் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்



தென்காசி மாவட்டம் வெள்ளாளன்குளம் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு தென்காசி மாவட்ட சுகாதார அலுவலர்கோவிந்தன்தலைமை வகித்தார் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாள ருமான ராஜா முகாமினை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் மற்றும் மருந்து பெட்டகங்கள் வழங்கி பேசினார், மேலநீலிதநல்லூர் வட்டார மருத்துவ அலுவலர் புரோஸ் கான், மருத்துவ அலுவலர் ஜாபர்அலி, தலைமை யிலான மருத்துவகுழுவினர்அனைத்து நோய்களுக்கும் சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு பரிசோதனை செய்து மருந்துகள் மற்றும் மருந்துவ ஆலோசனைகள் வழங்கினர். கர்ப்பிணி தாய்மார்களுக்கான ஸ்கேன், நீர், இரத்தம் ஆய்வக பரிசோதனைகள், எக்ஸ்ரே, இசிஜி, தடுப்பூசி பணிகள் அனைத்தும் அரசு சார்பாக இலவசமாக வழங்கப்பட்டன மேல் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தனர்.

இதில் கல்லூரியின் நிறுவனர், மற்றும் தாளாளர் கல்யாணசுந்தரம், முதல்வர் ஜெனிட்டா, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் செயின்ஸ் குமார், சுகாதார ஆய்வாளர்கள். சுப்பையா கண்ணன் பாலசுந்தரம் , செல்வ கிருஷ்ணன், ஜெயராம், சுகுமார், சுரேஷ், கண் சிகிச்சை உதவியாளர், முட நோக்கு உதவியாளர், சமுதாய நலசெவிலியர், கிராம சுகாதார செவிலியர்கள், நிலைய செவிலியர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

# பழனி முருகன் கோவிலில் ரோப் கார் சேவை 22ம் தேதி நிறுத்தம்



உலக புகழ்பெற்ற பழனி முருகன் கோவில், மலை மீது அமைந்துள்ளது. அடிவாரத்தில் இருந்து கோவிலுக்கு செல்ல படிப்பாதை, யானைப்பாதை பிரதான வழிகளாக உள்ளன. இது தவிர பக்தர்கள் மலைக் கோவிலுக்கு எளிதில் சென்றுவர ரோப்கார், மின்இழுவை ரெயில் ஆகிய சேவைகள் பயன்பாட்டில் உள்ளது. இதில் ரோப்கார் வழியாக விரைவாகவும். பழனி மலையின் இயற்கை அழகை பார்த்து ரசித்தபடியும் செல்லலாம் என்பதால் பெரும்பாலானோர் ரோப்காரில் செல்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் இந்த ரோப்கார் சேவை பக்தர்களுக்கு சிறந்த சுற்றுலா அனுபவத்தை கொடுக்கிறது.

பழனி ரோப்கார் நிலையத்தில் பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாதாந்திர, வருடாந்திர பராமரிப்பு பணி நடைபெறுவது வழக்கம். அப்போது ரோப்கார் சேவை நிறுத்தப்பட்டு பணி மேற்கொள்ளப்படும். அதன் படி பழனி முருகன் கோவில் ரோப்கார் நிலையத்தில், பராமரிப்பு பணிகள் காரணமாக வருகிற 22ம் தேதி ஒரு நாள் மட்டும் ரோப் கார் சேவை இயங்காது என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனவே பக்தர்கள் மின்இழுவை ரெயில், படிப்பாதையை பயன்படுத்தி மலைக்கோவிலுக்கு செல்லலாம் என்று கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 பெண்களிடம் சில்மிஷம் செய்த தொழிலாளி கைது

சேலம், டிச.21

சேலம் மாவட்டம் தலைவாசல் அருகே புளியங்குச்சி கிராமத்தைச் சேர்ந்தவர் இளையராஜா (வயது 32), கூலித்தொழிலாளி. இவர் அதே பகுதியில் கடந்த 15 ந் தேதி இரவு 11 மணிக்கு வீட்டில் தூங்கி கொண்டு இருந்த 52 வயது பெண்ணிடம் தகாத முறையில் நடக்க முயற்சி செய்துள்ளார். அந்த பெண் சத்தம் போட்டவுடன் இளையராஜா அங்கிருந்து வெளியே ஓடி உள்ளார்.

அதே கிராமத்தில் திண்ணையில் தூங்கிக்கொண்டிருந்த 58 வயது பெண் மற்றும் 62 வயது மூதாட்டியிடமும் அவர் தகாத முறையில் நடக்க முயன்றுள்ளார். அவர்களும் சத்தம் போடவே அங்கிருந்து தப்பிஓட முயன்றார். உடனே பொதுமக்கள் அவரை விரட்டி பிடித்து தர்ம அடி கொடுத்து போலீசில் ஒப்படைத்துள்ளனர்.

பொதுமக்கள் அடித்ததில் காயம் ஏற்பட்டதால் வாலிபர் இளையராஜா, ஆத்தூர் அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். பின்னர் சம்பவம் குறித்து பெண்கள் வீரகனூர் போலீசில் புகார் அளித்தனர். அதன்பேரில் இளையராஜா மீது கொலை மிரட்டல், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சக்திவேல் வழக்குப்பதிந்து இளையராஜாவை கைது செய்தார்.

# மகளை கடத்தி கள்ளக்காதலனுக்கு திருமணம் செய்து வைத்த தாய்: அதிர்ச்சி சம்பவம்

திருவண்ணாமலை டிச.21

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 42 வயது பெண். இவருடைய கணவர் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். மூத்த மகள் திருமணமாகி காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். 2வது மகளுக்கு 18 வயது ஆகிறது.

அதே பகுதியை சேர்ந்த சென்டரிங் தொழிலாளி கந்தன் (வயது 31) என்பவருக்கும், 42 வயது பெண்ணுக்கும் இடையே கள்ளக்காதல் இருந்துள்ளது. இந்த நிலையில் கடந்த 13ந்தேதி இரவு வீட்டில் இருந்த 42 வயது பெண்ணும், அவருடைய 2வது மகளும் மாயமானதாக கீழ்கொடுங்காலூர் போலீசில் மூத்த மகள் புகார் அளித்தார்.

அதன்பேரில் போலீசார் அவர்களை தேடி வந்தனர். இந்த நிலையில் அந்த பெண்ணின் செல்போன் எண்ணை ஆய்வு செய்ததில் அவர்கள் கேரள மாநிலத்தில் இருப்பது தெரியவந்தது.அதைத்தொடர்ந்து போலீசார் கேரளாவுக்கு சென்று அந்த பகுதியில் கண்காணித்தனர். அப்போது கேரளாவில் உள்ள ஒரு தேயிலை தோட்டத்தில் தாய், மகள் மற்றும் கந்தன் ஆகியோர் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து அவர்கள் மூவரையும் கீழ்கொடுங்காலூர்போலீஸ்நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்தனர். விசாரணையில் இளம்பெண் தன்னை வாயில் துணியை வைத்து தாயுடன் சேர்ந்து கந்தன் கடத்தியதாகவும், அங்கு சென்று தனக்கு கட்டாய தாலி கட்டி பலாத்காரம் செய்ததாகவும் தெரிவித்தார். இதற்கு தாய் உடந்தையாக இருந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து ஆள் கடத்தல், கட்டாய திருமணம், பலாத்காரம், பெண்ணுக்கு எதிரான கொடுமை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து கந்தன் மற்றும் இளம்பெண்ணின் தாய் ஆகிய இருவரையும் கைது செய்தனர். மீட்கப்பட்ட இளம்பெண்ணை அவரது அக்காவிடம் ஒப்படைத்தனர்.

மகளை தாயே கடத்தி கள்ளக்காதலனுக்கு திருமணம் செய்து வைத்த சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# "தற்கொலைகளின் தலைநகரமாக தமிழகம்.." கவர்னர் ஆர்.என்.ரவி பரபரப்பு குற்றச்சாட்டு

கோவை, டிச.21

கோவையில் உள்ள அரசு உதவிபெறும் கல்லூரியில் 'சிந்து சரஸ்வதி நாகரிகம்' என்ற பெயரில் கருத்தரங்கம் நேற்று தொடங்கியது. கருத்தரங்கை கவர்னர் ஆர்.என். ரவி தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் கூறுகையில், "உலக அளவில் இனம், மதம் காரணமாக பல போர்கள் நடைபெறுகிறது. தேசிய குற்ற ஆவணத்தின் விவரப்படி தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 20 ஆயிரம் பேர் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். நாள் ஒன்றுக்கு 65 பேர் தமிழ்நாட்டில் தற்கொலை செய்து கொள்கின்றனர். இதனால் இந்தியாவில் தற்கொலைகளின் தலைநகரமாக தமிழகம் உள்ளது.



மனஅழுத்தத்தினாலும், பிரிவினைகளாலும் பல வேறு பாதிப்புகளை மக்கள் சந்திக்கின்றனர். மனித வாழ்க்கையை மேம்படுத்துவதிலும், உலகில் அனைத்து உயிர்களும் ஒன்று என்பதை வலியுறுத்தும் பாரதத்தின் உன்னத கலாசாரம், தத்துவத்தை நாம் முன்னெடுத்துச்செல்ல வேண்டும்.

அதைத்தான் பிரதமர் மோடி தலைமையிலான அரசு நாட்டின் வளர்ச்சியோடு இழந்த நமது கலாசாரம், மறைக்கப்பட்டதத்துவங்களை மீட்டெடுத்து புது சக்தியை கொடுத்து வருகிறது.

நமது நாடு சர்வதேச அளவில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள் மட்டுமின்றி ஆன்மிக ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் பல தடைகளை கடந்து வளர்ந்து வருகிறது. ஆரியம், திராவிடம் என பிரிக்க நினைக்கிறார்கள். அவர்கள் தோற்றுப்போவார்கள். ஏனென்றால் அவர்களிடம் பொய்தான் உள்ளது" என்று அவர் கூறினார்.

# ரெயில் டிக்கெட் முன்பதிவுக்கு ஆதார் இணைப்பு கட்டாயம்; ஜனவரி 12ந்தேதி முதல் அமல்

சென்னை, டிச.21

ரெயில் டிக்கெட் முன்பதிவுகளில் முறைகேடுகளை தடுக்க ஐ.ஆர்.சி.டி.சி., இணையதளத்தில் காலை 8 மணி முதல் 10 மணி வரை ரெயில் டிக்கெட் முன்பதிவு செய்ய ஆதார் இணைப்பு கட்டாயம் என்பது தற்போது அமலில் இருக்கிறது. இந்த நடைமுறையில் புதிய மாற்றத்தை ரெயில்வே வாரியம் கொண்டுவந்துள்ளது.

அதன்படி, டிசம்பர் 29ந்தேதி முதல் காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், ஜனவரி 5ந்தேதிக்கு பின்னர் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் மூலம் டிக்கெட் முன்பதிவு செய்வதற்கு ஆதார் இணைப்பு கட்டாயம் ஆகிறது.

ஜனவரி 12ந்தேதிக்கு பிறகு ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளத்தில் ரெயில் டிக்கெட் முன்பதிவு செய்ய வேண்டும் என்றால் ஆதார் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படும் என ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

உண்மையான பயனாளர்களுக்கு ரெயில்வே டிக்கெட் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ரெயில் டிக்கெட் முன்பதிவுக்கு ஆதார் இணைப்பு கட்டாயம்; ஜனவரி 12ந்தேதி முதல் அமல்

தூத்துக்குடி

தூத்துக்குடி வண்ணார் முதல் தெருவை சேர்ந்த காந்திமதிநாதன் மகன் சரவணக்குமார் (வயது 41). இவர் கடந்த 16ம் தேதி இரவில் தன்னுடைய இருசக்கர வாகனத்தை தூத்துக்குடி பழைய பேருந்து நிறுத்தத்தில் உள்ள மாநகராட்சி சார்பில் நடத்தப்படுகின்றவாகனகாப்பகத்தில்நிறுத்தியுள்ளார். மறுநாள் 17ம் தேதி தன்னுடைய இருசக்கர வாகனத்தை சரவணகுமார் சென்று பார்த்த போது வாகனம் காணவில்லை. இது தொடர்பாக அங்கு பணியில் உள்ள மாநகராட்சி பணியாளர்களை கேட்டபோது எந்த ஒரு பதிலும் அவர்கள் கூறவில்லை. அங்கு உள்ள சிசிடிவி கேமரா பதிவை பார்த்தபோது ஒருவர் அந்த காணாமல் போன இருசக்கர வாகனத்தை மாநகராட்சி வாகன காப்பகத்தில் இருந்து எடுத்துச் செல்லும் காட்சி வெளியாகி உள்ளது.

இதனையடுத்து சரவணக்குமார் மத்திய பாகம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர். இதே போல மாநகராட்சி வாகன காப்பகத்தில் தொடர்ந்து இருசக்கர வாகனங்கள் திருட்டு போவதாகவும் புகார் கூறப்படுகிறது. அங்கு சரியான முறையில் பணியாளர்கள், செக்யூரிட்டிகள் இல்லை என்ற குற்றச்சாட்டும் வாகனத்தை விடுகின்றஇருசக்கரவாகனஉரிமையாளர்கள்தெரிவிக்கின்றனர். ஆகையால் மாநகராட்சி நிர்வாகம் வரும் காலங்களில் இருசக்கர வாகனங்கள் திருட்டு போகாத வகையில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# இன்சூரன்ஸ் பணத்துக்காக தந்தையை கொன்ற மகன்கள் பாம்பை விட்டு கடிக்க வைத்தது அம்பலம்

திருவள்ளூர் டிச.21

திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டை நல்லதண்ணீர்குளம் தெருவை சேர்ந்தவர் கணேசன் (56 வயது). இவர், அங்குள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆய்வக உதவியாளராக வேலை பார்த்து வந்தார். கணேசன், கடந்த அக்டோபர் மாதம் 22 ந்தேதி காலை வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது, பாம்பு கடித்து இறந்ததாக பொதட்டூர் பேட்டை போலீசில் அவரது மகன் புகார் செய்தார்.

அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர். ஆனால் கணேசனின் குடும்பத்தினர் முன்னுக்கு பின் முரணாக கூறியதால், அவர்களது நடவடிக்கையில் சந்தேகம் இருப்பதாக இன்சூரன்ஸ் நிறுவனம், வடக்கு மண்டல ஐ.ஜி.அஸ்ரா கார்க்கிடம் புகார் அளித்தது.





அதன்பேரில் போலீசார் நடத்திய விசாரணையில், கணேசன் பெயரில் பல உயர் மதிப்புள்ள இன்சூரன்ஸ் இருந்தது தெரியவந்தது. அதனை பெறுவதற்காக, கணேசனின் மகன்கள் மோகன்ராஜ், ஹரிஹரன் ஆகியோர் மணவூரை சேர்ந்த பாலாஜி (28 வயது), பிரசாந்த் (35 வயது), நவீன் குமார் (28 வயது), ராணிப்பேட்டை மாவட்டம் மோசூர் கிராமத்தைச் சேர்ந்த தினகரன் (28 வயது) ஆகியோருடன் சேர்ந்து தங்களது தந்தையின் கழுத்தில் கட்டுவிரியன் பாம்பை கடிக்க வைத்து கொலை செய்தது தெரிய வந்தது.

இதனையடுத்து மோகன்ராஜ், ஹரிகரன் உள்ளிட்ட 6 பேரையும் போலீசார் கைது செய்தனர். இன்சூரன்ஸ் பணத்துக்காக பாம்பை கடிக்க வைத்து மகன்களே தந்தையை கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# விக்கிரவாண்டி அருகே ஆற்றுப் பாலத்தில் மோதி ஆம்னி பேருந்து விபத்து: 35க்கும் மேற்பட்டோர் காயம்

விழுப்புரம், டிச.21

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஆம்னி பேருந்து ஒன்று ஆற்றுப் பாலத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

முன்னதாக ஆம்னி பேருந்து ஒன்று சுமார் 40 பயணிகளுடன் இன்று அதிகாலையில் விக்கிரவாண்டி அருகே சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சங்கராபரணி ஆற்றுப் பாலத்தில் சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, பாலத்தின் மைய தடுப்புச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.



இந்த விபத்தில் பேருந்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்த நிலையில், பேருந்தில் பயணித்த 35க்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த விக்கிரவாண்டி போலீசார் மற்றும் மீட்புக் குழுவினர், காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர்.

முதற்கட்ட விசாரணையில், டிரைவர் அதிவேகமாக பேருந்தை இயக்கியதே விபத்துக்கு காரணம் என்று தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பரபரப்பாகும் அரசியல் களம்.. த.வெ.க. தலைமையில் கூட்டணி அமைக்க தயாராகும் விஜய்



சென்னை, டிச.21

சட்டசபை தேர்தலை சந்திக்க முழு வீச்சில் த.வெ.க. தயாராகி வருகிறது. தற்போதைய சூழ்நிலையில் 234 தொகுதிக்கும் தொகுதிக்கு 3 வேட்பாளர்கள் கொண்ட பட்டியலை விஜய் தயார் செய்து வைத்துள்ளார். இதில், மாவட்ட செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், பெண்கள், பிரபலங்கள் இடம் பெற்றுள்ளனர்.

ஈரோடு மக்கள் சந்திப்பு பயணத்திற்கு பிறகு புத்துணர்ச்சியாக காணப்படும் விஜய், தொடர்ந்து சுற்றுப்பயணங்களை மேற்கொள்ள இருக்கிறார். இதற்கான பணிகளை த.வெ.க. நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் மேற்கொண்டுள்ளார். ஜெயலலிதா பாணியில் விஜய்க்கும் அவர் பயண திட்டத்தை வகுத்து வருகிறார்.

இதற்கிடையே, த.வெ.க. தலைமையில் கூட்டணி அமைக்கவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.அதற்கானபணிகளை கட்சியின் தலைவர் விஜய் முடுக்கி விட்டுள்ளார்.

த.வெ.க. கூட்டணிக்கு கட்சிகளை அழைத்து வரவும், அவர்களிடம் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவும் குழு அமைக்கப்பட உள்ளது. இந்த குழுவில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா ஆகியோர் இடம் பெற உள்ளனர்.

50 ஆண்டுகால அரசியல் அனுபவம் கொண்ட செங்கோட்டையனை கூட்டணி அமைப்பதற்கான குழு தலைவராக அமர்த்துவதன்மூலம் மற்ற கட்சி தலைவர்களைஎளிதாகஅணுக முடியும் என்று த.வெ.க. நம்புகிறது. எனவே விரைவில் இதற்கான அறிவிப்பை த.வெ.க. வெளியிட இருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் எந்த அணியிலும் இல்லாத தே.மு.தி.க., பா.ம.க., அ.ம.மு.க., புதிய தமிழகம் ஆகிய கட்சிகளிடம் செங்கோட்டையன் தலைமையிலான குழு நேரடியாக பேச்சு வார்த்தை நடத்த உள்ளது. ஜனவரிக்குள் கூட்டணி தொடர்பான நல்ல முடிவு எட்ட த.வெ.க. தலைமை வியூகம் அமைத்து செயல்பட்டு வருகிறது.

கூட்டணியில் சேரும் கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளை தவிர மற்ற தொகுதிகளில் த.வெ.க. வேட்பாளர்களை உடனடியாக அறிவிக்கவும் த.வெ.க. திட்டமிட்டுள்ளது. வரும் 24ந் தேதி கட்சிக்கு புதிய சின்னம் (விசில் அல்லது மோதிரம்) கிடைத்து விடும்என்பதால்த.வெ.க. தேர்தல் தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிட திட்டமிட்டுள்ளது.

# சாலையில் மாடுகளை சுற்றித்திரிய விட்டால் உரிமையாளர்களுக்கு அபராதம் நெல்லை மாநகராட்சி

நெல்லை, டிச.21

நெல்லை மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா உத்தரவுப்படி, மாநகராட்சி மைய அலுவலகத்தில் நேற்று கால்நடை வளர்ப்போருடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. சுகாதார அலுவலர் சாகுல் ஹமீது தலைமை தாங்கினார்.

அப்போது அதிகாரிகள் பேசுகையில், நெல்லை மாநகர பகுதியில் கால்நடை வளர்ப்போர் தங்களது ஆடு, மாடுகளை தொழுவத்தில் பராமரிக்க வேண்டும். பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக ரோடுகளில் சுற்றி திரிய விடக்கூடாது. இதை மீறி ரோட்டில் சுற்றித்திரியும் கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு ஒரு மாட்டிற்கு ரூ.5



ஆயிரம் வீதம் அபராதம் விதிக்கப்படும். அபராதம் கட்டாவிட்டால், பிடிக்கப்படும் மாடுகள் கோசாலையில் ஒப்படைக்கப்பட்டு பராமரிப்பு செலவுடன் அபராதம் விதிக்கப்பட்டு தொடர்ந்து போலீசார் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர். இதில் கால்நடை வளர்ப்போர் பலர் கலந்து கொண்டனர்.

# 22 முதல் 24ந்தேதி வரை குழாய் குடிநீர் வினியோகம் ரத்து: சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்ட முக்கிய தகவல்

சென்னை, டிச.21

சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வடசென்னை வளர்ச்சி திட்டப்பணியின் கீழ், மணலி காமராஜர் சாலையில் அமைந்துள்ள திருவொற்றியூர் நீருந்து நிலையத்தில் 1 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. இதற்காக, அந்நிலையத்தின் பிரதான குடிநீர் குழாயை மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.




இதனால் 22ந் தேதி (திங்கட்கிழமை) காலை 10 மணி முதல் 24ந்தேதி (புதன்கிழமை) காலை 10 மணி வரை (48 மணி நேரம்) திருவொற்றியூர் நீருந்து நிலையம் மற்றும் மணலி நீருந்து நிலையம் தற்காலிகமாக செயல்படாது. எனவே, திருவொற்றியூர் மற்றும் மணலி மண்டலங்களுக்கு உட்பட்ட கத்திவாக்கம், எண்ணூர், எர்ணாவூர், திருவொற்றியூர், காலடிப்பேட்டை மற்றும் சடையன்குப்பம் பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் வினியோகம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படுகிறது.

பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக் கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் வினியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சேலம், ஈரோடு, திருப்பூர் வழியாக பெங்களூரு-திருவனந்தபுரம் இடையே சிறப்பு ரெயில்

பெங்களூரு, டிச.21

தென்மேற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

பயணிகளின் கூட்ட நெரிசலை தவிர்க்க பெங்களூரு-திருவனந்தபுரம் இடையே சிறப்பு ரெயில் (ஒரு வழி) இயக்கப்பட உள்ளது. அதன்படி எஸ்.எம்.வி.டி. பெங்களூரு-திருவனந்தபுரம் வடக்கு சிறப்பு ரெயில் (வண்டி எண்: 06571) இன்று (சனிக்கிழமை) மதியம் 3 மணிக்கு பெங்களூருவில் இருந்து புறப்பட்டு மறுநாள் காலை 6.30 மணிக்கு திருவனந்தபுரத்தை சென்றடையும்.

மறுமார்க்கமாக திருவனந்தபுரம் வடக்கு-எஸ்.எம்.வி.டி. பெங்களூரு சிறப்பு ரெயில் (06572) நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்டு மறுநாள் அதிகாலை 3.30 மணிக்கு பெங்களூருவை வந்தடையும்.

இந்த ரெயில்கள் இரு மார்க்கமாகவும் சேலம், ஈரோடு, திருப்பூர், போத்தனூர், பாலக்காடு, திருச்சூர், ஆல்வா, எர்ணாகுளம் டவுன், கோட்டயம், சங்கனாச்சேரி, திருவல்லா, செங்கனூர், காயன்குளம், கொல்லம், வர்க்கலா ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

இதில் ஒரு முதல் வகுப்பு ஏ.சி. பெட்டி, ஒரு இரண்டு அடுக்கு ஏ.சி. பெட்டி, 5 மூன்றடுக்கு ஏ.சி. பெட்டிகள், 7 படுக்கை வசதி கொண்ட பெட்டிகள், 6 பொதுப் பெட்டிகள் என மொத்தம் 22 பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
21.12.2025

# திருப்பரங்குன்றத்தை அயோத்தியாக மாற்ற பாஜக முயற்சி திருமாவளவன்



கோயம்புத்தூர் டிச.21

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கோவையில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

மத்திய அரசு 100 நாள் வேலை திட்டத்தை அழிக்க முடிவு செய்து விட்டது. அந்த திட்டத்தில் காந்தியின் பெயர் இருக்க கூடாது என முடிவு செய்தது பாஜகவின் அரசியல் தரம் தாழ்ந்து இருக்கிறது என்பதற்கு இதைவிட உதாரணம் தேவையில்லை. இந்த திட்டத்திற்கு ஜி ராம் என்று பெயர் சூட்டி உள்ளனர். ஆனால் ஹே ராம் என்று சொன்ன காந்தியின் பெயரை நீக்கி இருக்கின்றனர். பாஜக மத்தியில் ஆட்சிக்கு வந்ததில் இருந்து காந்தியடிகளை சிறுமைப்படுத்துவதில் குறியாக உள்ளது.

100 நாள் வேலை திட்டத்திற்கான நிதியை படிப்படியாக குறைத்து வருகின்றனர். தற்போது மாநில அரசு 40சதவீதநிதியை அளிக்க வேண்டும் என உள்நோக்கத்துடன் கூறுகின்றனர். இதை கண்டித்து தி.மு.க. கூட்டணி சார்பில் தமிழகம் முழுவதும் 24ந்தேதி நடைபெற உள்ள ஆர்ப்பாட்டங்களில் விடுதலை சிறுத்தைகள் கட்சி பங்கேற்கும். சென்னையில் நடைபெறும் போராட்டத்தில் நான் கலந்து கொள்ள உள்ளேன்.

காங்கிரஸ் ஆட்சியில் தனியார் சொத்துகள், தேசியமயமாக்கப்பட்டது. ஆனால் பாஜக ஆட்சியில் அரசு சொத்துகளைதனியார் மயமாக்கி வருகின்றனர். சாதியவாதம், மதவாதம் போன்றவற்றை வைத்து இயங்குகின்றனர். தற்போது திருப்பரங்குன்றத்தை பாஜக அயோத்தியாக மாற்ற முயற்சிக்கிறது.

இதை கண்டிக்கும் வகையில் வருகிற 22ந்தேதி மதுரையில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இதில் நான் கலந்து கொள்வேன். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் மூலம் வாக்குரிமையை பறித்து பின்னர் குடியுரிமையை பறிக்க முயற்சிக்கின்றனர். பாஜகவிற்கு ஏதோ ஒரு உள்நோக்கம் உள்ளது. இதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் தேர்தல் ஆணையத்தை பயன்படுத்தி பணியை மேற்கொள்கின்றனர். திருப்பரங்குன்றத்தில் பூர்ணசந்திரன் இறந்தது கவலை அளிக்கிறது, அவரது குடும்பத்திற்கு தமிழக அரசு உரிய இழப்பீடு, அரசு வேலை வாய்ப்பு வழங்கி ஆதரிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தூத்துக்குடியில் பள்ளி மாணவனை கடத்திய 3 சிறுவர்கள் கைது

தூத்துக்குடி டிச.21

தூத்துக்குடி மாவட்டம், தென்திருப்பேரை அருகே உள்ள குரங்கணி, காட்டேரி அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த தங்கசாமி மகன் அபினேஷ் (வயது 16). இவர் மாவடிப்பண்ணையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வருகிறார். இந்த நிலையில், பள்ளி முடிந்து வந்து கொண்டிருந்த அபினேஷை, அவரது தந்தையின் மீதான முன்விரோதத்தில் 3 சிறுவர்கள் பைக்கில் கடத்திச் சென்றுள்ளனர்.

அதனை தொடர்ந்து, அபினேஷின் அண்ணன் முத்து நாராயணனை கைப்பேசியில் அழைத்து, உன் தம்பியை கடத்திச் செல்கிறோம் என்று கூறியுள்ளனர். இதுகுறித்து ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில் தங்கசாமி புகாரளித்தார். அந்த புகாரின்பேரில், போலீசார் சிறுவர்கள் சென்ற வழியைப் பின் தொடர்ந்து சென்றனர். அப்போது கூட்டாம்புளி மெயின் ரோட்டில் அபினேஷை இறக்கிவிட்டு 3 சிறுவர்களும் தப்பிச் சென்றனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அந்த 3 சிறுவர்களையும் போலீசார் கைது செய்து, தூத்துக்குடி குழந்தைகள் நல நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, பாளையங்கோட்டைசிறுவர்சீர்த்திருத்தப்பள்ளியில்சேர்த்தனர். மேலும் இந்த சம்பவத்தில் வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (21.12.2025)

**மேஷம்**: புதிய முயற்சிகளில் கவனம் தேவை. செலவுகளை கட்டுப்படுத்தினால்நன்மை. குடும்பத்தில் அமைதி.

**ரிஷபம்**: பணவரவு மேம்படும். உறவுகளில் புரிதல் அதிகரிக்கும். உடல்நலத்தில் சுறுசுறுப்பு.

**மிதுனம்**: பேச்சு திறன் முன்னேற்றம் தரும். படிப்பு/ திறன் வளர்ச்சிக்கு நல்ல நாள்.

**கடகம்**: மனஅமைதிதேவை. வீட்டுச் செலவுகள் கூடலாம். பொறுமை முக்கியம்.

**சிம்மம்**: தலைமைத் திறன் வெளிப்படும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி**: வேலையில் ஒழுங்கு கிடைக்கும். சிறிய தடைகளை திட்டமிட்டு சமாளிப்பீர்கள்.

**துலாம்**: உறவுகளில்சமநிலை. சட்ட/ ஒப்பந்த விஷயங்களில் கவனம்.

**விருச்சிகம்**: ஆழ்ந்த சிந்தனை பயன் தரும். ரகசியங்களை பாதுகாப்பது நல்லது.

**தனுசு**: பயணம் அல்லது புதிய அனுபவம் கிடைக்கும். ஆசான்கள் / மூத்தோரின் ஆலோசனை உதவும்.

**மகரம்**: வேலைச் சுமை இருந்தாலும் முன்னேற்றம். பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்**: புதுமையான யோசனைகள் வெற்றி தரும். நண்பர் வட்டம் விரியும்.

**மீனம்**: ஆன்மிக/கலை ஈர்ப்பு. ஓய்வு எடுத்தால் உடல்நலம் மேம்படும்.

# சாத்தான்குளம் பள்ளியில் தேசிய இரட்டையர்கள் தினம் கொண்டாட்டம்



தூத்துக்குடி டிச.21

சாத்தான்குளத்தில் உள்ளடி.என்.டி.டி.ஏ.ஆர். எம்.பி. புலமாடன் செட்டியார் தேசிய மேல்நிலைப் பள்ளியில், தூத்துக்குடி மாவட்டத்திலேயே அதிகமான இரட்டையர்கள், 12 ஜோடி மாணவ மாணவிகள் இரட்டையர்களாக, அதில் 7 ஜோடி சகோதரர்களும், 3 ஜோடி சகோதரிகளும், 2 ஜோடி சகோதர சகோதரிகளுமாக கல்வி பயின்று வருகிறார்கள்.

அவர்களை தலைமையாசிரியர் செல்லப்பாண்டியன் இரட்டையர்கள் தினம், மற்றும் இரட்டையர்கள் உருவாகும் விதம் போன்றவற்றை எடுத்துரைத்து வரும் காலங்களில் இரட்டையர்களாக அரசு வேலைகளில் பிரகாசிக்க வேண்டும் என இரட்டையர்களுக்கு இனிப்பு கொடுத்து வாழ்த்தினார்.

இந்தநிகழ்ச்சியில்உதவி தலைமையாசிரியர்கள் விஜயராணி, வளர்மதி ராஜபாய் மற்றும் அறிவியல் ஆசிரியர்லயன்டேனியல், ஆசிரியர்கள் அக்னஸ், ஜாய்ஸ்பாப்பா, ஸ்டீபன் மற்றும் ஆசிரிய ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு இரட்டையர்களை வாழ்த்தினர்.

# தூத்துக்குடி மத்தியபாகம் காவல் நிலையத்தில் எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் ஆய்வு



தூத்துக்குடி டிச.21

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் நேற்று தூத்துக்குடி மத்தியபாகம் காவல் நிலையத்தில் வருடாந்திர ஆய்வு மேற்கொண்டு காவல் நிலைய போலீசாரின் உடைமைகளை (Kit Inspection) பார்வையிட்டும், அங்கு பராமரிக்கப்பட்டு வரும் ஆவணங்கள் மற்றும் முக்கிய வழக்கு கோப்புகளை பார்வையிட்டும் ஆய்வு செய்தார்.

மேலும் அவர் அந்த காவல் நிலைய போலீசாரிடம், அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், புகார் அளிக்க வரும் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும், புகார் மனு பதிவு செய்ததற்கான வரவேற்பு சீட்டை (Reception Slip) வரவேற்பாளர் மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார். இந்த நிகழ்வின் போது தூத்துக்குடி நகர உட்கோட்ட ஏ.எஸ்.பி. மதன் உட்பட காவல்துறையினர் உடனிருந்தனர்.

# இரவில் அதிக நேரம் படிக்காதே என கண்டித்த பெற்றோர்... மாணவர் எடுத்த விபரீத முடிவு

தமிழகத்தில் தற்போது அரையாண்டு தேர்வுகள் நடைபெறும் காலம். மாணவ மாணவிகள் தீவிரம் கவனம் செலுத்தி படித்து வருவர். இந்நிலையில், அப்படி இரவில் அதிக நேரம் படித்த மாணவரை பெற்றோர் கண்டித்ததில், வருத்தமடைந்து பிளஸ்2 மாணவர் ஒருவர் 9வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்த அதிர்ச்சி சம்பவம் தெரிய வந்துள்ளது.

சென்னை வானகரம் பகுதியை சேர்ந்தவர் எபிபாத் (வயது 45). இவரது மனைவி ராஜேஸ்வரி அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறார். இந்த தம்பதியின் மகன் சஷ்வத் (17), தாய் பணிபுரியும் அதே தனியார் பள்ளியில் பிளஸ்2 படித்து வந்தார். இவர்கள் அடிக்கு மாடி குடியிருப்பில் 9வது தளத்தில் வசித்து வருகின்றனர். சஷ்வத் படித்து கொண்டிருந்தார். அப்போது படித்தது போதும் தூங்க செல் என பெற்றோர் கூறியுள்ளனர். சிறிது நேரத்தில் அடுக்குமாடி குடியிருப்பின் கீழ் பகுதியில் சிறுவன் ஒருவர் மாடியில் இருந்து விழுந்ததாக குடியிருப்பு வாசிகள் கூடினர்.

எபிபாத் மற்றும் அவரது மனைவி ராஜேஸ்வரி கீழே சென்று பார்த்தபோது சஷ்வத் ரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார். இதனை பார்த்து அவர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். சிறுவனை மீட்டு அருகே உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்ற நிலையில் ஏற்கனவே சஷ்வத் உயிரிழந்து விட்டார் என டாக்டர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து வானகரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில் சஷ்வத் வீட்டில் இரவு அதிக நேரம் படித்து வந்ததாகவும், அவரது பெற்றோர் படித்தது போதும் தூங்க செல் என்று கண்டித்ததாக தெரிகிறது. இதனால் மாணவர் சஷ்வத் வீட்டின் பால்கனி வழியாக கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. வேறு ஏதும் காரணம் உண்டா? என்றும் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கே.ஜி.எப்., சலார் பட உதவி இயக்குனரின் 4 வயது மகன் 'லிப்ட்'ல் சிக்கி பலி



கன்னட திரைஉலகில் பிரபல சின்னத்திரை இயக்குனராக இருந்து வருபவர்கீர்த்தன்நாடகவுடா. இவர்பிரபல நடிகர்யஷ் நடித்த கே.ஜி. எப்., கே.ஜி.எப்.2, பிரபாஸ் நடித்த 'சலார்' மற்றும் இயக்குனர் பிரசாந்த் நீல் இயக்கிய ஏராளமான திரைப்படங்களில் உதவி இயக்குனராக பணியாற்றி உள்ளார். இவருக்கு திருமணமாகி சம்ருத்தி படேல் என்ற மனைவியும், 4 வயதில் சிரஞ்சீவி சோனார்ஸ் கே.நாடகவுடா என்ற மகனும் உண்டு. இவர்கள் பெங்களூருவில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் இவர்கள் ஐதராபாத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்றிருந்தனர். அப்போது சிறுவன் சிரஞ்சீவி அங்குள்ள லிப்டில்தனியாக சென்று ஏற முயன்றான். அப்போது திடீரென லிப்டின் கதவு மூடியது. இதனால் சிறுவன் சிரஞ்சீவி படுகாயம் அடைந்தான். அவனை உடனடியாக கீர்த்தன் நாடகவுடா, அவரது மனைவி மற்றும் அங்கு விழாவில் கலந்து கொண்டிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக ஐதராபாத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் சிறுவன் சிரஞ்சீவி பலியானான். அவனது மறைவுக்கு நடிகர் யஷ், நடிகரும், ஆந்திர மாநில துணை முதல்மந்திரியுமான பவன் கல்யாண் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# டி20 கிரிக்கெட்டில் புதிய சாதனை படைத்த இந்திய அணி




இந்தியா தென் ஆப்பிரிக்கா இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட டி20 தொடரின் 5வது மற்றும் கடைசி போட்டி ஆமதாபாத்தில் நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணியின் கேப்டன் மார்க்ரம் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதனை தொடர்ந்து முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 231 ரன்கள் குவித்தது.

இதனையடுத்து 232 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய தென் ஆப்பிரிக்கா 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து அந்த அணி 201 ரன்கள் எடுத்தது. இந்திய தரப்பில் வருண் சக்ரவர்த்தி 4 விக்கெட்டுகளும், பும்ரா 2விக்கெட்டுகளும், பாண்ட்யா மற்றும் அர்ஷ்தீப் சிங் தலா 1 விக்கெட்டும் கைப்பற்றினர். இதனால், தென்ஆப்பிரிக்காவை 30 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது. 5 போட்டிகள் கொண்ட, தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான டி20 கிரிக்கெட் போட்டி தொடரில் இந்தியா 21 என்ற கணக்கில் ஏற்கனவே முன்னிலை வகித்த நிலையில், இந்த போட்டியில் பெற்ற வெற்றியால் தொடரையும் கைப்பற்றியுள்ளது.

இந்த நிலையில் , தென் ஆப்பிர்க்காவுக்கு எதிரான டி20 தொடரை வென்றதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் இந்திய அணி புதிய சாதனை படைத்துள்ளது.

சொந்த மண்ணில் தொடர்ச்சியாக அதிக டி20 தொடர்களை (9) வென்ற அணி என்ற புதிய சாதனையை இந்திய அணி படைத்தது .

# பரப்பன அக்ரஹார சிறையில் பவித்ரா கவுடாவை பார்ப்பதை தவிர்த்த நடிகர் தர்ஷன்



கன்னட திரை உலகில் பிரபல நடிகராக இருந்து வருபவர் தர்ஷன். இவர்தனது ரசிகரான சித்ரதுர்காவை சேர்ந்த ரேணுகாசாமி என்பவரை கொலை செய்த வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். இவர் உள்பட நடிகையும், தர்ஷனின் தோழியுமான பவித்ரா கவுடா உள்பட 17 பேர் இந்த வழக்கில் சிக்கியுள்ளனர். இவர்கள் மீதான வழக்கு விசாரணை கோர்ட்டில் துரித கதியில் நடந்து வருகிறது.

இந்த நிலையில் பரப்பனஅக்ரஹார பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டு உள்ள பவித்ராகவுடா, ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டு உள்ள நடிகர் தர்ஷனை பார்க்க முயன்றுள்ளார். ஆனால் அதற்கு தர்ஷன் மறுத்துவிட்டார். அவர் சாதுர்யமாக அதை தவிர்த்து விட்டதாக கூறப்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு போலீஸ் போலீஸ் அதிகாரிகள் பரப்பனஅக்ரஹார சிறையில் ஆய்வு மேற்கொண்டு கைதிகளை சந்தித்துள்ளனர். அப்போது அவர்களிடம் நடிகை பவித்ரா கவுடா, நடிகர் தர்ஷனை சந்திக்க அவகாசம் தரும்படி கேட்டுள்ளார்.

மேலும் இதுதொடர்பாக சிறைத்துறை டி.ஜி.பி. அலோக்குமாருக்கும் அவர் மனு அளித்திருந்தார். அதுபற்றி நடிகர் தர்ஷனிடமும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் எந்தவித காரணத்துக்காகவும் நடிகை பவித்ரா கவுடாவை சந்திக்க மாட்டேன் என்று நடிகர் தர்ஷன் திட்டவட்டமாக தெரிவித்து விட்டதாக கூறப்படுகிறது. இதன்மூலம் அவர்கள் இருவருக்கும் இடையே விரிசல் ஏற்பட்டு விட்டதாக பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

# தென்மண்டல பல்கலைக்கழக கைப்பந்து: எஸ்.ஆர்.எம். அணி சாம்பியன்



தென் மண்டல பல்கலைக்கழக பெண்கள் கைப்பந்து போட்டி சென்னையை அடுத்த அச்சரபாக்கத்தில் உள்ள எஸ்.ஆர்.எம். விவசாய கல்லூரி மைதானத்தில் கடந்த 5 நாட்கள் நடந்தது. இதில் நேற்று நடந்த 3வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் (தமிழ்நாடு) 2517, 2520, 2512 என்ற நேர் செட்டில் பாரதியார் பல்கலைக்கழத்தை (தமிழ்நாடு) வீழ்த்தி தொடர்ச்சியாக 3வது வெற்றியை ருசித்ததுடன் தொடர்ந்து 5வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

வேல்ஸ் பல்கலைக்கழகம் (தமிழ்நாடு) 2வது இடத்தையும், பாரதியார் பல்கலைக்கழகம் 3வது இடத்தையும், மகாத்மா காந்தி பல்கலைக்கழகம் (கேரளா) 4வது இடத்தையும் பெற்றன. முதல் 4 இடத்தை பிடித்த அணிகள் சென்னையை அடுத்த காட்டாங்கொளத்தூரில் உள்ள எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் நாளை தொடங்கும் அகில இந்திய பல்கலைக்கழக பெண்கள் கைப்பந்து போட்டிக்கு தகுதி பெற்றன.

# "சிறை" படத்தில் மீண்டும் போலீசாக நடித்தது குறித்து விக்ரம் பிரபு விளக்கம்

நடிகர் விக்ரம் பிரபுவின் திரைப்பயணத்தில் முக்கியமான படமாக அமைந்த 'டாணாக்காரன்' படத்தைத் தொடர்ந்து, அவர் மீண்டும் ஓர் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட கதையில் நடித்திருக்கிறார். இயக்குநர் தமிழ், தான் சந்தித்த ஓர் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து 'சிறை' என்ற பெயரில் எழுதிய கதையே தற்போது திரைப்படமாக உருவாகியுள்ளது. இதனை 'செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோ' சார்பில், தயாரிப்பாளர் லலித் குமார் தயாரிக்கிறார். இந்தப் படத்தில் விக்ரம் பிரபுவுடன் அறிமுகமாகும் எல்.கே.அக்ஷய் குமார் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். நாயகியாக அனந்தா நடித்திருக்கிறார். வெற்றிமாறனின் உதவியாளர் சுரேஷ் ராஜகுமாரி இயக்கி உள்ளார். ஜஸ்டின் பிரபாகரன் இசையமைத்துள்ளார். 'சிறை' படத்தின் புரோமோசனில் மீண்டும் போலீசாக நடித்தது குறித்து விக்ரம் பிரபு விளக்கம் அளித்துள்ளார். அதில் "'சிறை' எனது 25வது படம், தாத்தாவும், அப்பாவும் தங்களின் முதல் 25 படத்தில் சாதித்த அளவிற்கு நான் எதையும் சாதிக்கவில்லை. ஆனாலும் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறேன். நான் நடித்த படங்கள் வெற்றியோ, தோல்வியோ ஆனால் நல்ல படங்கள் என்பதிலேயே எனக்கு திருப்திதான். அதிகமாக போலீஸ் கேரக்டரில் தான் நடித்திருக்கிறேன். எனது தோற்றத்தை மனதில் வைத்து அப்படியான கேரக்டரோடு தான் கதை சொல்ல வருகிறார்கள். இனி போலீஸ் கேரக்டரில் நடிக்க வேண்டாம் என்று முடிவு செய்திருந்தபோது வந்த கதைதான் 'சிறை'. 'டாணாக்காரன்' இயக்குனர் தமிழ் இந்த கதை உங்களை மனதில் வைத்து எழுதவில்லை. ஆனால் 'டாணாக்காரன்' படத்தின் கேரக்டருக்க உயிர் கொடுத்தது போன்று இந்த படத்தின் கேரக்டருக்கு உயிர் கொடுக்க உங்களால்தான் முடியும் என்று சொன்னதால் நடிக்க ஒப்புக் கொண்டேன்.

'டாணாக்காரன்' படத்தில் பயிற்சி போலீஸ் என்பதால் எடை குறைத்து நடித்தேன். இதில் அதிகாரி என்பதால் எடையை கூட்டி நடித்திருக்கிறேன். தெலுங்கில் நடித்த 'காட்டி' படம் எனக்கு நல்ல பெயரை பெற்றுத் தந்தது. நானே டப்பிங் பேசி நடித்தேன். அனுஷ்கா நல்ல தோழியாக அமைந்தார். அவரது இரக்க குணத்தை பார்த்து ஆச்சர்யப்பட்டேன். தொடர்ந்து தெலுங்கு பட வாய்ப்புகள் வருகிறது. தேர்வு செய்து நடிக்க முடிவு செய்திருக்கிறேன். 25 படங்களில் நடித்து விட்டேன். அடுத்து வரும் 25 படங்களில் ஏதாவது சாதித்து காட்ட வேண்டும் என்று விரும்புகிறேன்" என்றார். இத்திரைப்படம் வரும் 25ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.

# ஸ்குவாஷ் உலகக் கோப்பையை வென்ற இந்திய வீரருக்கு ரொக்கப்பரிசு




சென்னையில் நடந்த உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்திய அணி, ஹாங்காங்கை வீழ்த்தி முதல்முறையாக சாம்பியன் பட்டத்தை வென்று வரலாறு படைத்தது. அந்த அணியில் அங்கம் வகித்த அபய் சிங் சென்னை வேளச்சேரியில் உள்ள குருநானக் கல்லூரியில் படித்து வருகிறார்.

உலகக் கோப்பை வெற்றியில் முக்கிய பங்கு வகித்த அபய் சிங்குக்கு பாராட்டு விழா குருநானக் கல்லூரியில் நடந்தது. இதில் அபய் சிங்குக்கு ரூ.11 லட்சம் ரொக்கப்பரிசை கல்லூரி தாளாளர் மஞ்சித் சிங் நய்யார் வழங்கினார். அத்துடன் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு ரூ.20 லட்சம் ஊக்கத்தொகையாக அளிக்கப்பட்டது. விழாவில் துணைத் தலைவர் ஜஸ்பீர்சிங் நருலா, முதல்வர் எழிலரசி, விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் நமச்சிவாயம், அபய் சிங்கின் பெற்றோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066